திணைக்கள சுற்றுநிரூபம் இல.: **09/2026**

# அரச சிறுவர் ஓவிய விழா – 2026

இலங்கை சிறுவர்களின் படைப்புத் திறனை மேம்படுத்துதல் மற்றும் பாராட்டுதல் ஆகியவற்றை முதன்மையான நோக்கமாகக் கொண்டு அரச சிறுவர் ஓவிய விழா நடத்தப்படுகிறது. இந்த வருடாந்திர அரசு சிறுவர் ஓவிய விழா, நாடு முழுவதிலுமிருந்து வரும் சிறுவர்களின் படைப்புகளின் பங்கேற்புடன் நடத்தப்படுகிறது. இந்தத் விருது விழா, நாட்டின் ஒவ்வொரு பிரதேச பிரிவு மற்றும் மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்களின் பங்கேற்புடன் நடைபெறும். இந்த அரச சிறுவர் ஓவிய விழா, சிறுவர்களின் படைப்பாற்றல் மிக்க கலைஞர்களாக மாறுவதற்குத் தேவையான திறன்களைப் பெற உதவுவதையும், அந்த நோக்கத்திற்குத் தேவையான படைப்பாற்றல் சிந்தனைத் திறன்களை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச கட்புலக்கலை குழு ஏற்பாடு செய்கின்ற அரச சிறுவர் ஓவிய விழா -2026 இற்கான **ஓவியங்களை 2026 ஜுலை மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 2026 ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வரை** கொழும்பு - 07, தேசிய கலாபவனத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இவ் ஓவியங்களிலிருந்து ஒரு மாவட்டத்திற்கு 150 ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதோடு இரண்டாம் சுற்றுக்காக முன்னனுப்பப்படுவர். இரண்டாம் சுற்று போட்டி மாகாண மட்டத்தில் விசேட பயிற்சி பட்டறை மூலம் நடாத்த செய்யப்பட்டுள்ளதுடன் முதலாம் சுற்றின் அனைத்து வெற்றியாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும். இரண்டாம் சுற்றில் தீட்டப்படுகின்ற ஓவியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் படைப்புக்கள் “2026 அரச சிறுவர் ஓவிய விழாவிற்காக சமர்ப்பிக்கப்படும். இவற்றில் இருந்து வெற்றிப்பெறும் பிள்ளைகளுக்கு அரச சிறுவர் ஓவிய விழாவின்போது விருதுபன் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

| | **போட்டி பிரிவுகள்** | **வயதெல்லை** | | **பிறந்த வருடம்** |
|---|---|---|---|---|
| 01. | பாலர் பிரிவு | வயது வருடம் | 05 – 06 | 2020-2019 |
| 02. | சிறுவர் பிரிவு | வயது வருடம் | 07 – 09 | 2018-2017-2016 |
| 03. | கனிஷ்ட பிரிவு | வயது வருடம் | 10 – 12 | 2015-2014-2013 |
| 04. | சிரேஷ்ட பிரிவு | வயது வருடம் | 13 – 15 | 2012-2011-2010 |
| 05. | அதி சிரேஷ்ட பிரிவு | வயது வருடம் | 16 – 18 | 2009-2008-2007 |

- **விசேட விருது – 10**
  ஒவ்வொரு போட்டிப் பிரிவிலும் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுவதற்குப் பதிலாக, ஒவ்வொரு போட்டிப் பிரிவிலும் சிறந்து விளங்கும் 10 பங்கேற்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள், சான்றிதழ்கள் மற்றும் பணப்பரிசுகள் வழங்கப்படும்.

- **திறமை விருது - 10**
  ஒவ்வொரு போட்டிப் பிரிவிற்கும் பத்து வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள், தகுதிச் சான்றிதழ்கள் மற்றும் பணப் பரிசுகள் வழங்கப்படும்.



CS CamScanner

## போட்டி நிபந்தனைகள்

1. நீங்கள் விரும்பும் எந்த கருப்பொருள், தலைப்பு அல்லது பொருளையும் வரையலாம்.
2. நீங்கள் வரைய விரும்பும் எந்த ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.
3. ஓவியம் 11.7×16.5 அங்குலம் (A3) அல்லது 18×14 அங்குல அளவில் இருத்தல் வேண்டும்."ஒருவர் ஒரு ஓவியத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.
4. ஒருவரால் ஒரு படைப்பை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.
5. உங்கள் நிரந்தர வசிப்பிட மாவட்டத்திலிருந்து மட்டுமே ஓவியப்படைப்புகளை சமர்ப்பிக்க முடியும்.
6. போட்டியில் பங்கேற்கும் போட்டியாளர்கள் தமது படைப்பு ஒரு சுயஆக்கம் (சொந்தப் படைப்பு) என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக, தமது விகாரையின் விகாராதிபதி தேரர், மதகுருமார், தமது பாடசாலை அதிபர், சமாதான நீதவான், கலை நிறுவனத் தலைவர் அல்லது தாம் வசிக்கும் கிராம சேவகர் பிரிவின் கிராம உத்தியோகத்தரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையைப் பெற்று அதனை உறுதிப்படுத்த வேண்டும்." போட்டி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத பதிவுகளும், கோரப்பட்ட தகவல்களை சரியாக உள்ளடக்காத ஓவியங்கள் போட்டியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படும்.
7. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்து, படைப்பின் பின்புறத்தில் பிரிந்துவிடாதவாறு ஒட்ட வேண்டும்."
8. போட்டி நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத மற்றும் அது தொடர்பான விபரங்களைச் சரியாகச் சமர்ப்பிக்காத படைப்புகள் போட்டியிலிருந்து நிராகரிக்கப்படலாம்."
9. நீங்கள் சமர்ப்பிக்கும் ஓவியப் படைப்பு திருப்பி அனுப்பப்படாது.
10. போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் ஒரு நிபுணத்துவ நடுவர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்களினால் தெரிவு செய்யப்படும் படைப்பாளிகள் மாத்திரமே மாவட்டப் போட்டிகளுக்கு பரிந்துரைக்கப்படுவர். அத்துடன், மாவட்டப் போட்டிகள் நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்."
11. அனைத்துப் படைப்புகளையும் "பொறுப்பதிகாரி, **"தேசிய கலா பவனம் (National Art Gallery), ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கலாம். மேலும், படைப்புகள் அடங்கிய கடித உறை அல்லது பார்சலின் மேல் இடதுபுற மூலையில் **''அரச சிறுவர் ஓவிய விழா - 2026''** எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்."
12. நடுவர் குழு எடுக்கும் முடிவே இறுதியானது.

**கே.எஸ். திலஹானி**
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்

தொடர்புகளுக்கு:- **011-2882551 / 011-2872031**
மேலும் தகவல்களை நாட்டின் அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் கலாசார உத்தியோகத்தர்களிடமிருந்தும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் Department of Cultural Affairs என்ற முகநூல் பக்கத்தைப் பார்வையிடுவதன் மூலமும் பெறலாம்.



CS CamScanner

# அரச சிறுவர் ஓவிய விழா – 2026

## விண்ணப்பப்படிவம்

- முழுப் பெயர் :...........................................................................
- முதலெழுத்துக்களுடன் பெயர் :...........................................................................
- பிறந்த திகதி :...........................................................................
- 2025.12.31 ஆம் திகதிக்கு வயது :...........................................................................
- போட்டிப் பிரிவு :...........................................................................
- ஓவியத்தின் தலைப்பு :...........................................................................
- சொந்த முகவரி :...........................................................................
- நிரந்த வதிவிட மாவட்டம் :...........................................................................
- தொலைபேசி இல. :...........................................................................

முதற் பக்கத்தில் இருக்கும் ஓவியம் எனது படைப்பு என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**<u>விண்ணப்பதாரரின் படைப்பைச் சான்றளித்தல்</u>**

மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரரான ........................................................................ என்பவரால் இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஓவியப் படைப்பானது, அவராலேயே வரையப்பட்ட சுயமானதொரு படைப்பு (சொந்தப் படைப்பு) என இத்தால் சான்றளிக்கின்றேன்.

திகதி:............................................

....................................................
சான்றளிப்பவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்



CamScanner